1984 மார்ச் 22]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிர்லா கம்பெனியில் தயாரிக்கப்படும் '' காண்டிசா '' (Contessa) எனப்படும் கார்களை வாங்குவதற்கு தமிழக அரசு ஆர்டர் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இது உண்மையானால், அது பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரங்கள் இல்லை.

சர்வீஸ் கமிஷன் தேர்வுகளுக்கான வயது வரம்பினை உயர்த்தும் திட்டம்.

388— (*வினா எண். 20416)— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சர்வீஸ் கமிஷன் தேர்வுகளுக்கான வயது வரம்பினை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் படித்து பட்டம் பெற்று, அதிலும் குறிப்பாக தமிழகத்திலே ஏராளமான பேர் வேலைக்காக பதிவு செய்துவிட்டு பல்லாண்டுக்காலமாக வேலை கிடைக்காமல் அவதிப்படுகின்ற இந்தக் கால கட்டத்தில், இப்போது எல்லா உத்தியோகங்களுக்கும் சர்வீஸ் கமிஷன் எழுத வேண்டும் என்று ஒரு நிலை வந்தபிறகு, இந்த வயது வரம்பை உயர்த்தித் தந்தால் வேலை கிடைக்காமல் இருப்பவர்களுக்கு இது ஒரு சலுகையாகக் கூட இருக்குமே, இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுகின்ற வயது 55 ஆக இருக்கின்றபோது 25 வயதுக்குள்ளாக சர்வீஸ் கமிஷன் எழுத வேண்டும் என்ற ஒரு நியதி இருந்தது. பிறகு 25–26 ஆக உயர்த்தப்பட்டது. இப்போது ஓய்வு பெறும் வயதை 58 ஆக உயர்த்தியதற்குப் பிறகு, எல்லோருக்கும் 26-லிருந்து 28 வயது வரை நாம் வயதை உயர்த்தியிருக்கிறோம். பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர்களுக்கு உச்ச வயது வரம்பில் 5 வருடங்கள் சலுகை அளித்துக் கொண்டு வருகிறோம். இதுதான் தற்போது நடைமுறையில் இருந்துகொண்டு வருகிறது.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக பரவி இருக்கக்கூடிய காலத்தில், நேற்றையதினம் கூட நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இடைநிலை ஆசிரியர்கள், 10 ஆண்டுக்

காலமாக, 10 ஆயிரம் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். ஆகவே வேலையில்லாதவர்கள் தொகை அதிகமாக மிகுந்திருக்கின்றபோது, அவர்கள் தேர்வாணைக்குழுவை நெருங்குகிறபோது, அங்கே தவறுகள் நடக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இந்த நல்ல காரியத்தைச் செம்மையாக நடத்துவதற்கும், இந்தத் தவறுகளை திருத்துவதற்கும் இந்த வயது வரம்பை உயர்த்தி வேலை இல்லாதவர்களுக்கு சலுகை அளிக்க அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி, ஓய்வு வயதை உயர்த்தும் போது, இந்த வயது வரம்பும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குள்ளாகவே இவர்கள் வேலை பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வேலை வாய்ப்பு அலுவலகங்கள், பல்வேறு துறைகளுக்கு கொடுக்கிற நேரத்தில், 1973, 1974, 1975-ல் பதிவு செய்தவர்களுக்கு முதல் சலுகை தந்து, கடைசியில் வயது குறைவானவர்களுக்கு இடம் கொடுக்காமல், அதிக அளவிற்கு வயது ஏறிக்கொண்டு போகிறது என்று, மேலே இருப்பவர்களுக்கு சலுகை அளித்து, 1974, 1975 மற்றும் 1976-ஆம் ஆண்டுகளில் பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை தந்து அவர்களுக்குத்தான் இப்போது வேலைக்காக அனுப்புகின்ற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. எனவே சர்வீஸ் கமிஷனில், இப்போது உயர்த்தியிருக்கின்ற அளவே போதுமானது என்ற அளவிற்கு நாம் கருதுகிறோம்.

லாட்டரி சீட்டில் பரிசுத் தொகையினைப் பெற்றுக்கொள்ளாமையால் சேர்ந்துள்ள தொகை.

389—(* வினா எண். 21722)— திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1981-82, 1982-83 மற்றும் 1983-84-ல் நவம்பர் முடிய லாட்டரி சீட்டில் பரிசுத் தொகை பெறப்படாமல் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

1981-82-ம் ஆண்டு வழங்கப்படாத பரிசுத் தொகை	ரூ. 39,80,480
1982-83 ஆண்டு வழங்கப்படாத பரிசுத் தொகை	ரூ. 41,40,830
1983-84 ஆண்டு (நவம்பர் முடிய) வழங்கப்படாத பரிசுத் தொகை	ரூ. 17,39,770
மொத்தம் ரூபாய்.	98,61,080